DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Cr.P.C/XXV BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 93/2023 |
| Deposition of witness | : | PW-5 |
| Name | : | வினோத் |
| Father’s /Husband Name | : | விஜயகுமார் |
| Village | : | இனாம்கிளியூர் |
| Taluk | : | வலங்கைமான் |
| Age | : | 35 |
| Occupation | : | **பெட்ரோல் பங்க் வேலை** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 12th day August 2024.
Accused A1, A2 present.

**முதல் விசாரணை:–**

நான் சாக்கோட்டை NAH பெட்ரோல் பங்கில் காசாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.2, அ.சா.3, அ.சா.4, சுப்பிரமணிய சிவா ஆகியோர் என்னுடன் பணிபுரிந்தவர்கள். எங்கள் பெட்ரோல் பங்கில் சாமிநாதன் மெக்கானிக். இவ்வழக்கில் இறந்துபோன பிரபு பேருந்து கிளினர் எனக்கு தெரியும். 2022ம் தேதி 7வது மாதம் இரவு சுமார் 12.00 மணிக்கு மேல் நான் பணியிலிருந்தபோது சத்தம்கேட்டு சென்று பார்த்தபோது பிரபு அடிபட்டு கீழே கிடந்தார். விசாரித்தபோது TN 49 AY 1414 பேருந்தை பின்னால் எடுக்கும்போது பிரபு மீது ஏறியதாக கூறினார்கள். அந்த பேருந்தை 1வது எதிரி பின்னால் எடுக்கும்போது 2வது எதிரி பின்னால் வரலாம் என கூறியதாக கூறினார்கள். பிரபு–க்கு கை, கால்களில் காயம் ஏற்பட்டிருந்தது. மேற்படி பேருந்துக்கும், பெட்ரோல் பங்க் கட்டைக்கும் இடையே பிரபு கிடந்தார். அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். அவர் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

எனது பணிநேரம் காலை 10.00 மணி முதல் இரவு சுமார் 12.00 வரை ஆகும். வேலையை பொறுத்து பெட்ரோல் பங்கில் நான் தங்குவேன், எல்லாம் நாளும் தங்க மாட்டேன். எங்கள் பெட்ரோல் பங்கில் தனியாக ஓய்வு அறை உள்ளது. வேலையை முடித்துவிட்டு அந்த அறையில் ஓய்வு எடுப்போம் என்றால் சரிதான். சத்தம்கேட்டு வந்து பார்த்தேன் என்றாலும், விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். ஆஜர் எதிரிகள் என்னுடன் பணிபுரிந்தவர்கள் என்றால் சரிதான்.

**நீதிமன்ற கேள்வி**

விபத்து ஏற்படுத்திய பேருந்தின் ஓட்டுநர், நடத்துநர் யார் என்றால் விபத்து நடந்தன்று 1வது எதிரி ஓட்டுநர், 2வது எதிரி நடத்துநர் ஆவார்கள்.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd./- M. Elavarasi,
Judicial Magistrate No.I,
Kumbakonam.